CHILDREN'S AID SOCIETY of TORONTO

LA SOCIÉTÉ DE L'AIDE à L'ENFANCE DE TORONTO



# ரொறன்ரோ Children's Aid Societyன் பொறுப்புக்கள் மற்றும் சேவைபெறுநர்களின் உரிமைகள்

## ரொறன்ரோ Children's Aid Societyன் (CAS) பொறுப்புக்கள் எவை?

பிள்ளையின் பாதுகாப்பே எங்களுடைய முக்கியமான பொறுப்பாக உள்ளது. ரொறன்ரோவிலுள்ள 16 வயதுக்குட்பட்ட பிள்ளை ஒருவர் உடல்ரீதியான அல்லது உணர்ச்சிரீதியான ஆபத்துக்கு அல்லது பாலியல்ரீதியான துன்புறுத்தலுக்கு அல்லது புறக்கணிப்புக்கு உட்பட்டிருக்கும் அல்லது அவற்றுக்கான அபாயத்தில் இருக்கும் சூழல் எதுவாக இருந்தாலும், அதில் இடையீடு செய்வதற்கு பிள்ளை மற்றும் குடும்ப சேவைகள் சட்டத்தின் (Child and Family Services Act (ஒன்ராறியோ)) கீழ் நாங்கள் சட்டரீதியாகக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளோம்.

## ரொறன்ரோ CAS வழங்கும் சேவைகள் யாவை?

குடும்பத்தவருக்கான ஆதரவு, வளர்ப்புப் பெற்றோர் சேவை, பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குழுக்கள், தத்தெடுப்பு மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கான உதவி போன்ற சேவைகளை பிள்ளை மேலாண்மை (Child management) செய்கின்றது. அத்துடன், சமூகத்தில் உள்ள ஏனைய சேவைகளுடன் மக்களை நாங்கள் இணைக்கின்றோம்.

## தகவல் ஒன்று அளிக்கப்படும் போது என்ன நடக்கும்?

பெற்றோர் அல்லது பிள்ளை ஒருவர் எங்களை நேரடியாக அழைக்கலாம். உறவினர், சினேகிதர், ஆசிரியர் பொதுச் சுகாதாரத் தாதி, மருத்துவர் அல்லது சமூகத்திலுள்ள ஆரோக்கிய நிபுணர் ஒருவர் பரிந்துரைப்புக்கள் செய்யலாம்.

உங்களுடைய பிள்ளை துன்புறுத்தப்படுகின்றார் அல்லது புறக்கணிக்கப்படுகின்றார் என எவராவது அறிவித்தால், துன்புறுத்தப்படுதல் நிகழ்கின்றதா என்பதைத் தீர்மானிப்பதற்காக உங்களுடைய வீட்டுக்கு ரொறன்ரோ CAS பணியாளர் ஒருவர் வருகை தருவார். உங்களுடைய பிள்ளை ஆபத்தில் இருப்பதாக அந்தப் பணியாளர் நினைத்தால், அந்தப் பிள்ளையைப் எப்படிப் பாதுகாக்க வேண்டும் மற்றும் உங்களுடைய குடும்பத்துக்கு எப்படி உதவிசெய்ய வேண்டும் என்பதை அவர் தீர்மானிக்க வேண்டும். அந்தப் பணியாளர், உங்களுக்கு ஆதரவாகச் சேவைகள் வழங்கலாம் அல்லது உங்களுடைய பிள்ளையை வீட்டிலிருந்து தற்காலிகமாக அகற்றுவதற்கு முடிவு செய்யலாம்.

அந்தப் பிள்ளைக்கு உடனடியான ஆபத்து இருப்பது போலத் தெரிவதுடன் அந்த வீட்டிலிருந்து பிள்ளையை அகற்றுவதுதான் அவருடைய பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான ஒரே ஒரு வழி எனில், உங்களுடைய ஒப்புதலுடனோ அல்லது ஒப்புதல் இல்லாமலோ அதைச் செய்ய முடியும். குடும்ப நண்பர், உறவினர் அல்லது வளர்ப்பு வீடு போன்ற ஒரு பாதுகாப்பான இடத்துக்கு அந்தப் பிள்ளை எடுத்துச் செல்லப்படுவார்.

## ரொறன்ரோ CAS மற்றும் குடும்பங்கள் எவ்வாறு சேர்ந்து தொழிற்படுகின்றன?

பல்வேறு காரணங்களினால் பிள்ளைகள் ரொறன்ரோ CASன் பராமரிப்புக்குள் வருகின்றனர். அவர்களுடைய பெற்றோர் அவர்களைப் பாதுகாப்பாகப் பராமரிக்க முடியாதவர்களாக இருக்கலாம், கவுன்சலிங் அல்லது கல்விபுகட்டல் போன்ற சேவைகள் பயனளிக்காமல் அல்லது கிடைக்காமல் இருக்கலாம், மற்றும் சினேகிதர் அல்லது உறவினர் உதவி செய்யமுடியாமல் இருக்கலாம்.

பராமரிப்புக்குள் எடுக்கப்படும் ஒவ்வொரு பிள்ளையினதும் ஆறு மடங்கு பிள்ளைகளுக்கு அவர்களுடைய சொந்த வீடுகளில் சேவையாற்றப்படுகின்றது. சில பிள்ளைகள் அவர்களுடைய பெற்றோரின் விருப்பத்தின் பேரில் எங்களுடைய பராமரிப்பில் வைக்கப்படுகின்றனர் அதே நேரத்தில் ஏனையோர் நீதிமன்றக் கட்டளையின்படி வைக்கப்படுகின்றனர். தன்னார்வ அடிப்படையில் பிள்ளை ஒருவரைப் பராமரிப்புக்குள் கொண்டுவருவது எப்போதாவது சிறந்ததாக அமையலாம். பிள்ளைக்கு 12 அல்லது அதற்கு மேற்பட்ட வயதாயின், உங்களுடைய ஒப்புதலுடனும் உங்களுடைய பிள்ளையின் ஒப்புதலுடனும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இது செய்யப்படுகிறது.

உங்களுடைய விருப்பத்துக்கு மாறாக வீட்டிலிருந்து உங்களுடைய பிள்ளை அகற்றப்பட்டால், அடுத்து என்ன நடக்க வேண்டும் என்பதை நீதிபதி ஒருவர் தீர்மானிப்பார். ஐந்து நாட்களுக்குள் அந்த நிலைமையை குடும்ப நீதிமன்ற நீதிபதி ஒருவரிடம் ரொறன்ரோ CAS முன்வைக்க வேண்டும். பிள்ளை ரொறன்ரோ CASன் பராமரிப்பில் தொடர்ந்திருக்க வேண்டுமா அல்லது வீட்டுக்குத் திரும்ப வேண்டுமா என்பதை நீதிபதி முடிவு செய்வார். நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவுவதற்கு வழக்கறிஞர் ஒருவரை நீங்கள் அமர்த்த முடியும். அப்படி ஒருவரை அமர்த்துவது உங்களுக்குக் கட்டுபடியாகாது என்றால், சட்ட உதவி அலுவலகத்தில் இருந்து நீங்கள் உதவி கேட்க வேண்டும்.

## அந்தப் பிள்ளையின் உரிமைகள் யாவை?

- அவருடைய வயது மற்றும் திறனுக்கு ஏற்றவிதத்தில் அவருடைய வாழ்க்கை பற்றி எடுக்கப்படும் முக்கியமான தீர்மானங்களில் பங்கேற்கும் உரிமை
- அந்தரங்கம் பேணப்படுவதற்கான உரிமை

மறுபக்கம் பார்க்க...



(...முன்பக்கத் தொடர்ச்சி)

# ரொறன்ரோ **Children's Aid Society**ன் பொறுப்புக்கள் மற்றும் சேவைபெறுநர்களின் உரிமைகள்

- உங்களுடைய பிள்ளைக்கு நன்மையானது அல்ல என நீதிபதி ஒருவர் தீர்மானித்தால் அல்லது அந்த CAS பணியாளர் அதைத் தீர்மானிப்பதற்கான நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்டிருந்தாலேயன்றி, உங்களிடம் வருகைதருவதற்கான உரிமை
- போஷாக்கான உணவு, அவருடைய திறன்களுக்குப் பொருத்தமான கல்வி, கிரமமான மருத்துவ மற்றும் பல்மருத்துவக் கவனிப்பு, வயதுக்கேற்ற உடை மற்றும் பாடசாலைக்குப் பின்பான பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் பங்களிப்பு உள்ளடங்கலான தகுந்த பராமரிப்பைப் பெறுவதற்கான உரிமை
- உடல்ரீதியான துன்புறுத்தல் அல்லது தண்டனை மற்றும் உணர்ச்சிரீதியான, பாலியல்ரீதியான மற்றும் வாய்மொழிரீதியான துன்புறுத்தலில் இருந்து விடுபட்டிருப்பதற்கான உரிமை
- அவருடைய மதத்தைப் பின்பற்றுவதற்கும் மதரீதியான போதனையைப் பெறுவதற்குமான உரிமை
- அவருடைய கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்கு முக்கியமான செயற்பாடுகளில் பங்குகொள்வதற்கான உரிமை
- திறன், பாலியல் நாட்டம் மற்றும் பாலின அடையாளம் உள்ளடங்கலான அவருடைய தனித்துவம் மதிக்கப்படுவதற்கான உரிமை

## அந்தப் பெற்றோரின் உரிமைகள் யாவை?

நீதிமன்றம் தொடர்பான அனைத்து விடயங்களையும் உங்களுக்கு அறிவிப்பதற்கு முடியுமானளவுக்கு ரொறன்ரோ CAS முயற்சிக்க வேண்டும். உங்களுடைய பிள்ளை எங்களுடைய பராமரிப்பில் தொடர்ந்திருக்க வேண்டுமென குடும்ப நீதிமன்ற நீதிபதி தீர்மானித்தால், ரொறன்ரோ CAS உங்களுக்கு அதை அறிவிப்பதுடன் உங்களுடைய பிள்ளையைப் பாதிக்கும் அனைத்துத் தீர்மானங்களிலும் நீங்கள் பங்குகொள்வதற்கு அனுமதிக்க வேண்டும். ரொறன்ரோ CAS கோப்புகளிலுள்ள குறித்த தகவல்களுக்கும் நியாயமான அணுகுதல் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு எங்களுடைய பராமரிப்பில் இருந்தாலென்ன, வீட்டுக்குத் திரும்பி வந்தாலென்ன உங்களுடைய பிள்ளையின் சிறப்பான பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கு, அனைவரும் என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்துக்காட்டும் திட்டமொன்று உருவாக்கப்படும்.

உங்களுடைய பிள்ளைக்கு நன்மையானது அல்ல என நீதிபதி ஒருவர் அல்லது உங்களுடைய ரொறன்ரோ CAS பணியாளர் மற்றும்/அல்லது நீதிமன்றக் கட்டளைக்கூடான உங்களுடைய பிள்ளையின் ரொறன்ரோ CAS பணியாளர் கருதினாலேயேயன்றி, உங்களுடைய பிள்ளையைத் தனிமையில் நீங்கள் சந்திக்கலாம்.

இந்தச் சந்திப்புக்கள் உங்களுடைய வீட்டில், சமூகத்தில் அல்லது உங்களுடைய பிள்ளை வசிக்குமிடத்தில் நிகழலாம்.

நீங்களும் உங்களுடைய ரொறன்ரோ CAS பணியாளரும்(மற்றும் உங்களுடைய பிள்ளைக்குப் போதுமான வயதிருப்பின் அவரும்) உங்களுடைய சந்திப்புக்கள் எப்போது, எங்கே, எத்தனை நாளுக்கு ஒரு தடவை என்பதைக் கலந்துரையாடுவீர்கள்.

## பதிவுகள் ரகசியமானவையா?

ஆம். எங்களுடைய செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதற்காகவும் உங்களுடைய குடும்பத்துக்கு உதவுவதற்காக முக்கியமான தகவல்களைச் சேகரிப்பதற்காகவும், பிள்ளைகளுடனும் அவர்களுடைய குடும்பத்தவர்களுடனுமான அனைத்துத் தொடர்புகளினதும் துல்லியமான பதிவுகளை ரொறன்ரோ CAS பேண வேண்டும். அனைத்துப் பதிவுகளும் ரகசியமானவையாக இருக்கும் அத்துடன் அவற்றின் உள்ளடக்கங்களை வெளிப்படுத்தல் கடுமையாக கட்டுப்படுத்தப்படுகிறது.

உங்களுக்கு பின்வரும் உரிமைகள் உள்ளன:

- உங்களுடைய பதிவுகளை பரிசீலிக்கவும் விளங்கிக்கொள்ளவும்
- பதிவுகள் உங்களுக்கு விளக்கமளிக்கப்படுவதற்கு
- திருத்தங்களை வேண்டுவதற்கு

## ரொறன்ரோ **CAS** சேவைகள் பற்றிய கரிசனைகள் இருந்தால் என்ன செய்வது?

பிரச்சினை இருந்தால், அதைத் தீர்ப்பதற்கு எங்களால் முடிந்தவரை முயற்சிப்போம். ஏதாவது கரிசனைகள் அல்லது கேள்விகள் உங்களுக்கு இருந்தால், தயவுசெய்து உங்களுடைய CAS பணியாளருடன் தயங்காமல் பேசுங்கள்.

உங்களாலும் உங்களுடைய CAS பணியாளராலும் அதைத் தீர்க்க முடியாவிட்டால், CAS மேற்பார்வையாளருடன் பேச வேண்டுமெனக் கேளுங்கள். எங்களுடைய அனுபவத்தின்படி பொதுவாக அனைத்துப் பிரச்சினைகளும் இந்தக் கட்டத்தில் தீர்க்கப்பட்டுவிடும். எனினும், உங்களால், உங்களுடைய சமூக சேவகரால், மற்றும் மேற்பார்வையாளரால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றால், CAS இடம் முறைப்பாடுகளுக்கான உத்தியோகபூர்வமான நடைமுறை ஒன்று உள்ளது, அது உங்களுக்கு விளங்கப்படுத்தப்படும். முறைப்பாடு செய்யும் முறை பற்றிய எழுத்து வடிவப் பிரதி ஒன்றை எந்த நேரத்திலும் நீங்கள் கேட்க முடியும்.

மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து ரொறன்ரோ Children's Aid Societyஐ அழையுங்கள் **416-924-4646** அல்லது **inquiries@TorontoCAS.ca**

**www.TorontoCAS.ca**